தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் 03.08.2026

## முன்னிலை

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 9819/SCIC/2024**

Thiru T.RUSSEL RAJ - மேல்முறையீட்டாளர்
Old No.21, New Avadi Road
Kilpauk Garden
சென்னை - 600 010.
Phone: 87544 65204

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
காவல் துணை ஆணையாளர்
மத்திய குற்றப்பிரிவு - 3
சென்னை பெருநகரக் காவல்
வேப்பேரி, சென்னை-600 007.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **26.03.2024** |
| 2. | மனுதாரரின் மனு சட்டப்பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் | 18.04.2024 |
| 3. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 10.05.2024 |
| 4. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 29.05.2024 |
| 5. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 22.06.2024 |
| 6. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 24.07.2024 |
| 7. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 07.01.2026 |
| 8. | மனுதாரரின் ஆட்சேபனை மனு | 11.07.2026 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 26/03/2024 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ காவல் ஆணையாளர், சென்னை பெருநகரக் காவல் ஆணையரகம், வேப்பேரி, சென்னை-7 அவர்களுக்கு அனுப்பி, அதில் "Furnish me acopy of the forged letter dated 23-03-2022 in the name of Mr.S.David sent to the Inspector of Police, Central Crime

Branch, EDF-II, Chennai" என்பன போன்று 9 (ஒன்பது) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (03/08/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திரு.T.ரஸ்ஸல் ராஜ் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். மனுதாரரின் வருகையின்மை ஆணையத்தால் பதிவு செய்யப்படுகிறது. பொது அதிகார அமைப்பின் சார்பில் தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 8(2)-ன்படி அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியாக, திரு.எஸ்.சார்லஸ் சாம் ராஜதுரை, கூடுதல் துணை ஆணையாளர்-2, மத்திய குற்றப்பிரிவு, பெருநகர காவல் ஆணையரகம், சென்னை-7 அவர்கள் ஆஜரானார். **ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 19(1)-ன் கீழான 29/05/2024 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவில் இனங்கள் 2, 8 மற்றும் 9 ஆகியவற்றிற்கு தவறான பதில் அளிப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். இன்றைய விசாரணையின் போது ஆஜரான பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதி ஏற்கனவே 10/05/2024, 22/06/2024 மீண்டும் 07/01/2026 தேதியிட்ட கடிதங்கள் வாயிலாக பதில் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரர் 11/07/2026 தேதியிட்டு தனது ஆட்சேபனை மனுவினை அனுப்பியுள்ளார். பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதி தெரிவிக்கையில், குற்ற எண்.20/2014, தொடர்பான Case in CC No.7484/2016 பெருநகர சென்னை குற்றப்பிரிவு நடுவர் நீதிமன்றம், எழும்பூர், சென்னையில் முடித்து வைக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கில் மேலும் விசாரணை மேற்கொள்வதற்கான பொதுநலன் ஏதுமில்லை எனத் தெரிய வருகிறது. மேலும், மனுதாரர் கோரிய தகவல்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டதாகத் தெரிய வருகிறது. ஆணையத்தின் அழைப்பாணை அனுப்பப்பட்டு, தனது வாதுரையினை பதிவு செய்ய வாய்ப்பளிக்கப்பட்டும், மனுதாரர் இன்றைய விசாரணையில் ஆஜராகத் தவறியுள்ளார். எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**வழக்கு எண். SA 9819/SCIC/2024**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர் /
காவல் துணை ஆணையாளர்
மத்திய குற்றப்பிரிவு - 3
சென்னை பெருநகரக் காவல்
வேப்பேரி, சென்னை-600 007.

**மேல்முறையீட்டாளர்**

Thiru T.RUSSEL RAJ
Old No.21, New Avadi Road
Kilpauk Garden
**சென்னை** - 600 010.
Phone: 87544 65204
RG/Sr.PC